# தேர்ச்சி - மூன்று :- அறநெறி வாழ்வைக் காட்டும் இறை கட்டளைகளைக் கடைப்பிடிப்பர்

17

## 3.4. பெரியோரை மதித்து மகிழ்வோம்

**உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும்படி, உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட.**

**(வி.ப. 20:12)**

ஒரு குடும்பத்தின் முன்னேற்றத்திற்காக தகப்பனும் தாயும் தலைமைதாங்கி உழைப்பர். பாடசாலையின் முன்னேற்றத்திற்காக ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் உழைப்பர். சமுதாயத்தில் தார்மீகத்தை ஏற்படுத்துவதற்காக மறைத்தலைவர்கள் முன்னின்று உழைப்பர்.

அவ்வாறே நல்வாழ்வு வாழும் பிரஜைகள் எமது சமுதாயத்திற்குத் தேவைப்படுவர். ஆசிரியர்கள், புத்திசாலிகள் சமுதாயத்திற்கு இன்றியமையாதவர்கள். இவ் அனைவருக்கும் நாம் அன்பு செலுத்தி மரியாதை செய்ய வேண்டும். இவர்கள் அனைவரும் இறைவனின் பெயரால் சமுதாயத்தில் உள்ளனர். இவர்கள் அனைவரும் இறைவனுக்காக சமுதாயத்தில் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றுவர். தலைமைத்துவம் வகித்து பணியாற்றுவதும் இறை அழைப்பாகும்.

அவர்கள் சேவைக்காக அர்ப்பணித்து சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக அயராது உழைப்பர். இறைவனின் படைப்புச் செயலில் பங்காளியாவதற்கு சமுதாயம் உழைக்கின்றது. உலகை முன்னேற்றி நன்மையை நோக்கிச் செல்வதற்கு சமுதாயத்தோடு ஒன்றிணைந்து செயற்படுகின்றது.

**நான்காம்**

**கட்டளை**

**"உன் பிதாவையும்**

**மாதாவையும்**

**மதித்திருப்பாயாக."**

● **சமுதாயத்தில் நாம் மரியாதை செலுத்த வேண்டியவர்கள் யார்?**

**பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது. "உன் தந்தையையும் தாயையும் மதித்து நட" என்பதே வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை. "இதனால் நீ நலம் பெறுவாய், மண்ணுலகில் நீடூழி வாழ்வாய்" என்பதே அவ்வாக்குறுதி.**

**(எபே. 6:1–3)**

**பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரைச் சார்ந்தவர்களுக்கு இதுவே தகும்.**

**(கொலோ. 3:20)**

இச்சமுதாயத்திற்கு நாமும் உரிமையாளர்கள். அதனால், எமக்கும் பொறுப்பு உண்டு. எனது பணியை நன்றாகத் தெரிந்துகொண்டு அதைக் கூடுமானவரை நிறைவேற்ற எமக்கு அயலவர்கள் தேவைப்படுவர்.

## எமது கடமைகள்

- இறைவனுக்குக் கீழ்ப்படிதல்
- ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிதல்
- பெரியோர்களுக்குக் கீழ்ப்படிதல்
- அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல்
- குருக்களுக்குக் கீழ்ப்படிதல்
- மறைப் பணியாளர்களுக்குக் கீழ்ப்படிதல்

இவர்களுக்கு எம்மால் இயன்றளவு உதவி செய்வது எமது பொறுப்பாகும். எம்மைப் பெற்றெடுத்து, கல்வி புகட்டி, எம்மை நல்ல மனிதர்களாக்குவதற்கு அவர்கள் எடுக்கும் முயற்சிக்காகவே நாம் அவர்களை மதிக்க வேண்டும்.

இறை சித்தத்தை நிறைவேற்றுவதற்காக உழைக்கும் அவர்களுக்கு மரியாதை செய்வது இறைவனுக்குக் காட்டும் மரியாதையாகும். அவர்களுக்கு நன்றி செலுத்துதல் இறைவனுக்கு நன்றி செலுத்துவதாகும். அவர்களுக்கு உதவி செய்தல் இறைவனின் படைப்புச் செயலில் பங்காளியாவதாகும்.

மேற்குறிப்பிட்டவர்களுக்கு உதவி தேவைப்படும் போது முழுமனதுடன் அவ்வுதவியை அவர்களுக்கு செய்வது மிகப்பெரிய நன்றிச் செயலாகும்.

நாம் வாழுகின்ற எம் தாய் நாட்டிற்கு பணிசெய்தலும் அதற்கு மரியாதை செய்தலும் எம் அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாகும்.



சிறுவருக்கு முன்மாதிரிகை காட்டலும், பெற்றோருக்கு உதவி செய்தலும் எம் அனைவரதும் கடமையாகும்.

**உமது கவனத்திற்கு...**

பெரியோர்களுக்கு மரியாதை செய்வதன் மூலம் இறைவனுக்கு உகந்தவர்களாக வாழலாம்.

**விடையளிக்கவும்**

- நான்காம் கட்டளைக்கேற்ப நீர் செய்யவேண்டிய கடமைகள் ஐந்து எழுதுக.
- பிள்ளைகள் மட்டில் பெற்றோருக்கும், பெற்றோர் மட்டில் பிள்ளைகளுக்கும் இருக்கும் கடமைகள் முறையே ஐந்து எழுதுக.